பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
02 07 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஐந்து நாடுகள் பயணத்தின் முதற்கட்டமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கானா புறப்பட்டுச் செல்கிறார்.

2. தீவிரவாத தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் உரிமை இந்தியாவுக்கு உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழக பிஜேபி நிர்வாகிகள் கைது செய்யப்பட்டதற்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஹைதராபாதில் நடைபெற்ற எலைட் மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் **Lovlina Borgohain** தங்கப் பதக்கமும், நிகத் ஸரீன் வெள்ளிப் பதக்கமும் வென்றுள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

*<<<<>>>>*

ஐந்து நாடுகள் பயணத்தின் முதற்கட்டமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கானா புறப்பட்டுச் செல்கிறார்.

இன்றும் நாளையும், கானாவில் பயணம் மேற்கொள்ளும் அவர், அந்நாட்டு அதிபர் திரு. **John Dramani Mahama**-ஐ சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

குறிப்பாக பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நாளையும், நாளை மறுநாளும் ட்ரினிடாட் - டொபாகோ செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் திரு. **Christine Carla Kangaloo** மற்றும் பிரதமர் திரு. **Kamla Persad – Bissessar** ஆகியோரை சந்தித்துப் பேசுவதுடன், அந்நாட்டு நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திலும் உரையாற்றுகிறார்.

பின்னர் அங்கிருந்து அர்ஜென்டினா செல்லும் பிரதமர், 5ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரை பிரேசில் நாட்டில் நடைபெறும் ப்ரிக்ஸ் உச்சி மாநாட்டிலும் கலந்துகொள்கிறார்.

தமது பயணத்தின் கடைசி கட்டமாக இம்மாதம் 9ஆம் தேதி பிரதமர் நமீபியா செல்கிறார்.

<<<<>>>>

தீவிரவாத தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் உரிமை இந்தியாவுக்கு உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. **Pete Hegseth** உடன் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்திய அவர், எல்லைதாண்டிய தீவிரவாத தாக்குதல்களைத் தடுப்பதற்காகவே இந்தியா நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

இந்தியாவின் நடவடிக்கைகள் பதற்றத்தை ஏற்படுத்தாமல், தீவிரவாத இலக்குகளைக் குறிவைத்து நடத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா அளித்து வரும் ஆதரவுக்கு இந்தப் பேச்சுவார்த்தையின்போது திரு. ராஜ்நாத் சிங் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

<<<<>>>>

தீவிரவாத தாக்குதலில் இருந்து தற்காத்துக்கொள்ளும் உரிமையை நிலைநாட்டும் வகையிலேயே ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்ற அவர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோ, ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திருமதி **Penny**

**Wong** மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் திரு. **Takeshi Iwaya** ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

அப்போது குவாட் உறுப்பு நாடுகள் இந்தியாவின் நிலைப்பாட்டை புரிந்துகொள்ள வேண்டும் என்று திரு. ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டார்.

தீவிரவாதத்தை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்ட அவர், தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களையும், அதனை ஊக்குவிப்போரையும் சமமாக கருத முடியாது என்றும் தெரிவித்தார்.

இதனிடையே குவாட் அமைச்சர்கள் கூட்டம் குறித்து திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தக் கூட்டம் மிகவும் ஆக்கப்பூர்வமானதாக அமைந்ததாக கூறியுள்ளார்.

மேலும் இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் நிலைத்தன்மை குறித்தும், இப்பகுதியை சுதந்திரமான மற்றும் வெளிப்படையான பகுதியாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதித்ததாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மத்திய சாலைப் போக்குவரத்து

மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் திரு. சுக்விந்தர் சிங் சுகு-வை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிய அவர், தேசிய நெடுஞ்சாலை அதிகாரியிடம் அத்துமீறி நடந்துகொண்ட அம்மாநில பஞ்சாயத்ராஜ் அமைச்சர் திரு. அனிருத்சிங் ராணா உள்ளிட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை அவதூறாக பேசிய திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. ராசாவைக் கண்டித்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிஜேபி நிர்வாகிகள் கைது செய்யப்பட்டதற்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேச்சுரிமை என்பது ஜனநாயகத்தின் அங்கம் என்பதுபோல, அரசைக் கண்டித்துப் போராடுவதற்கும் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினருக்கு நீதிமன்றங்கள் அனுமதி அளித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தமிழக பிஜேபியின் மூத்த தலைவர்களான திருமதி தமிழிசை சௌந்தரராஜன், திரு. நாராயணன் திருப்பதி, திரு. கரு. நாகராஜன் உள்ளிட்டோரை கைது செய்ததன் மூலம் தமிழக காவல்துறை அரசின் கைப்பாவையாக செயல்படுவதாக டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர், வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 78 மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே 48 இந்திய மீனவர்கள் இலங்கை சிறையில் உள்ள நிலையில், அந்நாட்டு கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகள், மீனவர்களிடையே துரயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த ஜூன் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி ஒரு லட்சத்து 84 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூலாகி இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த வசூல், கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட ஆறு புள்ளி 2 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 30 ஆயிரம் கோடி ரூபாயும், அதற்கு அடுத்தபடியாக கர்நாடகாவில் 13 ஆயிரத்து 409 கோடி ரூபாயும் வசூலிக்கப்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

2024-25 நிதியாண்டில் ஒட்டுமொத்தமாக 22 புள்ளி 8 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஜி.எஸ்.டி. வசூலாகி இருப்பதாகவும் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையில், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த வரி விதிப்பு பொருளாதார அநீதியாக கருதப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் அனைத்து தரப்பினருக்கும் உகந்த வரி விதிப்பு முறை தேவை என்றும், அத்தகைய முறைதான் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்களிப்பை வழங்கும் சிறு வியாபாரிகள், விவசாயிகளுக்குப் பயனளிக்கும் என்றும் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வானிலை இயக்கம் திட்டத்தின்கீழ் நாட்டின் வானிலை முன்னறிவிப்பு அமைப்பு முறை, உலக அளவில் சிறந்ததாக மேம்படுத்தப்பட்டு வருகிறது என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த சில நாட்களாக நேரிடும் வானிலை நிகழ்வுகள் குறித்த கேள்விகளுக்கு பதிலளித்துள்ள அவர், நாட்டின் பழமையான வானிலை ஆய்வு மையம் சிம்லாவில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இங்கிருந்து வெளியிடப்படும் முன்னறிவிப்புகளை அதிகரிக்க தானியங்கி சாதனங்கள் மற்றும் டாப்ளர் ரேடார்களை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேக வெடிப்புகள் திடீரென ஏற்படுவதால் அவற்றின் தன்மையை முன்கூட்டியே கணிப்பது கடினம் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மருத்துவத் துறையில் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் நாட்டிற்கே முன்மாதிரியாக திகழ்வதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தேசிய மருத்துவ தினத்தையொட்டி சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிப் பேசிய அவர், சாலை விபத்துகளில் சிக்கி காயமடைவோருக்கு சிகிச்சை அளிக்க ‘இன்னுயிர் காப்போம்’ திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை 2 லட்சம் ரூபாயா உயர்த்தப்பட்டுள்ளது என்றார்.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 4 லட்சம் பேரின் உயிர் காப்பாற்றப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்று இருதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்போம், நடப்போம் - நலம்பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வகம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

ஹைதராபாதில் நடைபெற்ற எலைட் மகளிர் குத்துச்சண்டைப் போட்டியில் அசாமைச் சேர்ந்த **Lovlina Borgohain** தங்கப் பதக்கம் வென்றார்.

மகளிர் 75 கிலோ எடைப்பிரிவில் அவர், இப்பதக்கத்தை வென்றார்.

51 கிலோ எடைப்பிரிவில் தெலங்கானாவை சேர்ந்த நிகத் ஸரீன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான 2வது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 24 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**Bristol**-ல் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 7 விக்கெட் இழப்புக்கு 157 ரன் மட்டுமே எடுத்தது.

5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

---------------

உலக குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் சாக்ஷி, **Lakshya Chahar** மற்றும் **Jaismine Lamboria** ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<>>>>**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவு தொடக்க ஆட்டத்தில், இந்தியாவின் ரோஹன் போபன்னா, யூகி பாம்ரி, ஸ்ரீராம் பாலாஜி மற்றும் ரித்விக் சௌத்ரி பொலிபல்லி ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

**<<<<The End>>>>**